**Date: 06.08.26**



தக்காளி காயாகவும் பழமாகவும் சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. தக்காளி உற்பத்தியில் சீனா முதல் இடத்திலும் இந்தியா, துருக்கி முறையே இரண்டாவது, மூன்றாவது இடங்களிலும் இருக்கின்றன.

உடுமலைப்பேட்டையிலிருந்து 42 கி.மீ. தூரத்தில் இருக்கிறது கேரளத்தின் மறையூர். இங்கே பண்டைக் காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் கல்திட்டைகளும் பாறை ஓவியங்களும் இருக்கின்றன.



### கடன் இலக்கு

ரூ.1.73 லட்சம் கோடி கடன் வாங்கவும் ரூ.52 ஆயிரம் கோடி கடனைத் திருப்பிச் செலுத்தவும் திட்டமிட்டுள்ளதாக தமிழக அரசு தகவல்.

# ரூ.812 கோடியில் 'அண்ணன் சீர்' திட்டம்

**திருமணங்களுக்கு 8 கிராம் தங்கக் காசு, பட்டுப்புடவை** • **ஏழைகளுக்கு 'வெற்றி வீடு' திட்டம்**

**மாணவர்களுக்கு ஹெல்மெட்டுடன் சைக்கிள்** • **வீடுகளில் சோலார் பேனலுக்கு ரூ.1 லட்சம் மானியம்**

**சென்னை**

தவெக அரசின் முதல் பொது பட்ஜெட்டை நிதியமைச்சர் மரிய வில்சன், சட்டப்பேரவையில் நேற்று தாக்கல் செய்தார். அதில், ரூ.812 கோடியில் 'அண்ணன் சீர்' திட்டம் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன.

தமிழகத்தில் நடப்பு நிதியாண்டுக்கான (2026-27) திருத்தப்பட்ட பொது பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்காகச் சட்டப்பேரவை நேற்று கூடியது. தவெக அரசின் முதல் பட்ஜெட்டை, நிதியமைச்சர் நெ.மரிய வில்சன் தாக்கல் செய்தார். பேரவையில் 10.01 மணிக்கு பட்ஜெட்டை வாசிக்கத் தொடங்கி 12.31 மணிக்கு பட்ஜெட் உரையை முடித்தார். பட்ஜெட்டை தாக்கல் செய்து அமைச்சர் மரிய வில்சன் பேசியதாவது:

ஆட்சிக்கு வந்த 3 மாதங்களில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2036-ம் ஆண்டுக்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவதே அரசின் 'வெற்றித் தமிழகம் - தொலைநோக்குத் திட்டங்கள்' இலக்கு. இந்த பட்ஜெட்டை மக்கள் நலன் காக்கும் கருவியாகப் பயன்படுத்தி தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைத்துள்ளோம். மேலும், மத்திய அரசின் நிதி பகிர்வு உட்பட மாநில அரசின் மொத்த வருவாய் வரவு 2026-27-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் ரூ.3,50,027 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**புதிய திட்டங்கள்**

- 'அண்ணன் சீர்' திட்டத்தின் கீழ் பெண்களின் திருமணத்துக்கு 8 கிராம் (ஒரு சவரன்) தங்கக் காசு, ஒரு பட்டுப்புடவை வழங்கப்படும். இதற்காக ரூ.812 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- கர்ப்பிணி பெண்களுக்கான 'தாய் கேர்' சேவை மற்றும் உதவி மையங்கள் அமைக்கப்படும். இதில் கர்ப்பிணிகளுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகள், தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும்.
- ஆதரவற்ற பெண்கள், கைம்பெண்கள், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் 5 ஆடுகள் வழங்கும், 'வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்புத் திட்டம்' செயல்படுத்தப்படும்.
- கல்லூரி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் 'வெற்றி மடிக்கணினி திட்டம்' ரூ.2,000 கோடியில் செயல்படுத்தப்படும்.
- 11-ம் வகுப்பு பயிலும் 5.32 லட்சம் மாணவர்களுக்கு ஹெல்மெட் மற்றும் வாட்டர் பாட்டில் வசதியுடன் கூடிய நவீன பிராண்டட் மிதிவண்டிகள் வழங்கப்படும்.
- வெற்றி வீடு திட்டம் மூலம் ஊரகப் பகுதிகளில் ஏழைகளுக்கான வீடு கட்டும் திட்டத்தின் அலகுத் தொகை ரூ.3.1 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும். முதல் ஆண்டில் 70,000 வீடுகள் ரூ.3,500 கோடியில் கட்டப்படும்.
- மீன்பிடி தடை கால உதவித் தொகை ரூ.7 ஆயிரமாக உயர்த்தப்படும். இதன்மூலம் 1.93 லட்சம் குடும்பங்கள் பயன்பெறும்.
- வீடுகளில் சோலார் பேனல் அமைக்க ரூ.1 லட்சம் மானியம் வழங்கப்படும்.
- மாநிலம் முழுவதும் பொது இடங்களில் 20,000 மின் வாகன சார்ஜிங் மையங்கள் அமைக்கப்படும்.
- இந்தியாவின் முதல் பிரத்யேக செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மற்றும் 'டீப் டெக்' நகரமாக 'அறிவகம்' உருவாக்கப்படும். மேலும், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய பகுதிகள், 'விண்வெளித் தொழில் முதலீட்டு மண்டலமாக' அறிவிக்கப்படும்.
- சென்னை பிராட்வேயில் 160 நீதிமன்றங்களுடன் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் ரூ.1,375 கோடியில் அமைக்கப்படும்.
- முதல் முறை ஹஜ் பயணிகளுக்கான மானியம் ரூ.35 ஆயிரமாக உயர்த்தப்படும்.
- காயிதே மில்லத் நினைவாக ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில் புதிய விருது வழங்கப்படும்.
- காவிரி - வைகை - குண்டாறு நதி நீர் இணைப்பு திட்டம் செயல்படுத்தப்படும். பெண்ணையாறு - பாலாறு உள்ளிட்ட நதிநீர் இணைப்புத் திட்டங்களுக்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு.
- கூவம் மற்றும் அடையாறு ஆறுகளை மீட்டெடுத்து சென்னையின் அடையாளமாக மாற்ற உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படும்.
- கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட 8 கடலோர மாவட்டங்களில் 2,500 எக்டேர் பரப்பளவில் புதிய சதுப்புநில அலையாத்திக் காடுகள் வளர்க்கப்படும்.
- மாநிலம் முழுவதும் ரூ.50 கோடியில் 10 ஒலிம்பிக் சிறப்பு மையங்கள் நிறுவப்படும். மேலும், ரூ.42 கோடியில் தமிழ்நாடு கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.
- அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் தினமும் ஒரு மணி நேரம் விளையாட்டுப் பாடவேளை அறிமுகம் செய்யப்பட உள்ளது.
- நீட் தேர்வை ரத்து செய்து, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையிலான மருத்துவச் சேர்க்கை நடத்த மத்திய அரசுக்கு வலியுறுத்தப்படுகிறது.
- போதைப் பழக்கத்தில் இருந்து மீள்வதற்கானப் பணிகளை முன்னெடுக்க மறுவாழ்வு நிதியாக ரூ.70 கோடி ஒதுக்கப்படும்.
- அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு 2031-ம் ஆண்டு வரை புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். அடிப்படை காப்பீடு ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.7.5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் மரிய வில்சன் அறிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று காலை 9.30 மணிக்கு வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் வினோத் தாக்கல் செய்கிறார்.



தவெக அரசின் முதல் பட்ஜெட் அடங்கிய பையுடன் முதல்வர் விஜய், நிதியமைச்சர் மரிய வில்சன்.

**பட்ஜெட் முழு விவரம் உள்ளே**

---

**தொகுதி மறுவரையறை மசோதாவை நிறைவேற்ற**

# 3 நாள் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடர்

**எதிர்க்கட்சிகளுடன் மத்திய அரசு ஆலோசனை**

**புதுடெல்லி**

தொகுதி மறுவரையறை மசோதாவை நிறைவேற்றுவதற்காக, 3 நாள் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரை கூட்டுவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவையில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மையுடன் இருந்தாலும், தொகுதி மறுவரையறை உள்ளிட்ட திருத்த மசோதாக்களை நிறைவேற்றும் போது இந்திய அரசியலமைப்பின் 369-வது பிரிவின் கீழ் ஒட்டுமொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் 3-ல் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு அவசியம்.

இந்நிலையில், தொகுதி மறுவரையறை மசோதா கடந்த ஏப்ரலில் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தோல்வி அடைந்தது. இந்நிலையில், இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரை நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக ஆகஸ்ட் 16, 17, 18-ம் தேதிகளில் சிறப்பு கூட்டத் தொடர் இருக்கும் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. இதில் தொகுதி மறுவரையறை மசோதா, மகளிர் இடஒதுக்கீட்டு திருத்த மசோதாக்கள் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிகிறது. இதுதொடர்பாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது. ஆனால், சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சிகளுடன் கலந்தாலோசித்து விட்டு விரைவில் பதில் அளிப்பதாகக் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரலில் நடைபெற்ற இந்த மசோதா மீதான வாக்கெடுப்பின் போது 528 எம்.பி.க்கள் மக்களவையில் இருந்தனர். அதன்படி, 352 பேரின் வாக்குகள் இருந்தால் மட்டுமே மசோதா நிறைவேறும் நிலை இருந்தது. ஆனால், மசோதாவுக்கு ஆதரவாக 298 வாக்குகளும், எதிராக 230 வாக்குகளும் விழுந்தன. இதனால் மசோதா தோல்வி அடைந்தது.

இந்த முறை மசோதா தோல்வி அடையாமல் இருக்க எதிர்க்கட்சிகள் மத்தியில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது மக்களவையில் மத்திய அரசுக்குப் போதுமான பலம் உள்ளன. அதேபோல் மாநிலங்களவையில் 3-ல் 2 பங்கு மெஜாரிட்டிக்குத் தேவையான எம்.பி.க்களின் எண்ணிக்கையைத் தேசிய ஜனநாயகக் கூட்டணி நெருங்கியுள்ளது. எனவே, இம்முறை 2 மசோதாக்களும் நிறைவேறும் என தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு நம்பிக்கையுடன் உள்ளது.

பொது அறிவு: இந்தியாவின் மிகப் பழமையான தொழிற்சங்கக் கூட்டமைப்பான அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) 1920-ம் ஆண்டு அப்போதைய பம்பாய் நகரில் தோற்றுவிக்கப்பட்டது. இதன் முதல் தலைவராக லாலா லஜ்பத் ராய் பதவி வகித்தார்.

---

செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் விளையாட்டு வீரரின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

# காமன்வெல்த் விளையாட்டில் பதக்கம் வென்ற தமிழக வீரர்களுக்கு ரூ.80 லட்சம் ஊக்கத் தொகை

## முதல்வர் விஜய் வழங்கினார்

**சென்னை**

காமன்வெல்த் விளையாட்டில் பதக்கம் வென்ற தமிழக விளையாட்டு வீரர்களுக்கு ரூ.80 லட்சம் ஊக்கத் தொகையை முதல்வர் விஜய் வழங்கி பாராட்டினார்.

தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டு போட்டிகளில் தமிழகத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்று வெற்றிபெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், விளையாட்டுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு முன்னெடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் பங்கேற்று ஆண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் 65 கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த ராஜா முத்துப்பாண்டிக்கு ரூ.30 லட்சம், ஆண்களுக்கான மும்முறை தாண்டுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த தடகள வீரர் பிரவீன் சித்திரவேலுக்கு ரூ.30 லட்சம், வெண்கலப் பதக்கம் வென்ற மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த செல்வ பிரபுவுக்கு ரூ.20 லட்சம் உயரிய ஊக்கத் தொகையை சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் நேற்று வழங்கி பாராட்டினார்.

இதில் பிரவீன் சித்திரவேல் மற்றும் செல்வ பிரபு ஆகியோர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முன்னாள் விடுதி மாணவர்களாக இருந்தவர்கள் ஆவர். மேலும் பிரவீன் சித்திரவேல் அரசு வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இடஒதுக்கீட்டின்படி தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் பணிபுரிந்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, செயலர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### விபத்தில் மரணமடைந்தால்

# பத்திரிகையாளர்களுக்கு ரூ.2 லட்சம் நிவாரணம்

## தமிழக அரசு அரசாணை வெளியீடு

**சென்னை**

விபத்தில் உயிரிழக்கும் பத்திரிகையாளர்களுக்கு நலவாரியம் மூலமாக ரூ.2 லட்சம் வரை நிவாரணம் வழங்குவதற்கு தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து செய்தித்துறை செயலர் வே.ராஜாராமன் வெளியிட்ட அரசாணை:

பத்திரிகையாளர் நலவாரியக் குழுவின் 8, 9-வது கூட்டங்களில் பத்திரிகையாளர்களின் விபத்து மரண நிவாரணம் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், பத்திரிகையாளர் நலவாரிய நிதியில் இருந்து விபத்தால் மரணமடையும் பத்திரிகையாளர்களுக்கு ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்கவும், இந்தத் தொகையை முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து இல்லாமல், நலவாரிய நிதியில் இருந்தே அளிக்கவும் அந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதையேற்று தற்போது அதிகாரப்பூர்வமாக அரசாணையை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு பொது மருத்துவமனை சார்பாக 1835-ல் மருத்துவப் பள்ளி தொடங்கப்பட்டது. இதுவே 1850-ல் மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியாக (MMC) உருவெடுத்தது. 1842-ல் இங்குதான் இந்தியாவிலேயே முதன்முதலில் 'மருந்தியல்' (Pharmacy) படிப்பு அறிமுகம் செய்யப்பட்டது.

# ஆகஸ்ட் 19, 20-ல் தென்மாநில முதல்வர்கள் மாநாடு

## கோவளத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

**கோவளம்**

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் தென் மாநில முதல்வர்கள் மாநாடு ஆகஸ்ட் 19, 20-ம் தேதிகளில் சென்னையை அடுத்த கோவளத்தில் நடைபெறவுள்ளது.

அண்டை மாநிலங்களுக்கு இடையேயான உறவை சுமூகமாக பேணும்விதமாக மத்திய அரசால் மாநில முதல்வர்கள் மாநாடு நடத்தப்படுகிறது. அதன்படி, 31-வது தென்மாநில முதல்வர்கள் மாநாடு. செங்கல்பட்டு மாவட்டம் கோவளத்தில் உள்ள பிஷர்மேன் கோவ் ஹோட்டலில் ஆகஸ்ட் 19 20 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. மாநாட்டுக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமை வகிப்பார். இதில் தமிழகம், கேரளம், கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

இந்த கூட்டத்தில் மாநிலங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு, பொருளாதார வளர்ச்சி, தொழில் முதலீடுகள், கூட்டுறவை பலப்படுத்துவது, கட்டமைப்பு மேம்பாடு, நீர்வளப் பகிர்வு, கல்வி, சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், பேரிடர் மேலாண்மை, குற்றங்கள் தடுப்பு எல்லைப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. தற்போது காவிரி நீர் பங்கீடு விவகாரத்தில் கர்நாடகா மற்றும் தமிழகம் இடையே முரண்பாடுகள் எழுந்த நிலையில், இந்த கூட்டம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

மாநாட்டை முன்னிட்டு கோவளம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாநாடு நடைபெறும் பிஷர்மேன் கோவ் ஹோட்டல் வளாகம், கிழக்கு கடற்கரைச் சாலை மற்றும் முக்கிய சந்திப்புகளில் காவல்துறை பாதுகாப்பு பலப்படுத்தப்பட உள்ளது. விருந்தினர்கள் தங்குமிடங்கள், போக்குவரத்து வழித்தடங்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறப்பு பாதுகாப்பு திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் போக்குவரத்தில் தற்காலிக மாற்றம் செய்யப்படலாம்.


'வெற்றி வீடு திட்டம்' மூலம்
ரூ.3,500 கோடியில் 70,000 வீடுகள்
அலகுத்தொகை ரூ.3.10 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்வு
அனைவருக்கும் அரசு சேவைகள் உரிய நேரத்தில் கிடைக்க
'சேவை உரிமை சட்டம்'
திருவள்ளுவர் தினத்தில்
காயிதே மில்லத் விருது
விண்வெளித் தொழில் முதலீட்டு மண்டலமாகும் தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்கள்
20 ஆயிரம் மின்சார வாகன பொது சார்ஜிங் மையங்கள்
சோலார் பேனல் அமைக்க ரூ.1 லட்சம் மானியம்

## வேளாண் துறைக்கு ரூ.14,984 கோடி

## 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்துக்கு ரூ.560 கோடி

அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அதன்மூலம் மருத்துவ தேவைக்காக மக்கள் செலவிடும் தொகையை குறைக்கும் நோக்கில், 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், தாய்மாமனின் அன்பளிப்பாக 1 கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும். இத்திட்டத்துக்கு ரூ.560 கோடி ஒதுக்கப்படுகிறது.

**கூட்டுறவுத் துறைக்கு ரூ.8,028 கோடி:** பட்ஜெட்டில், கூட்டுறவுத் துறைக்கு ரூ.8,028 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு வழங்கும் மின்மானியத்துக்கு ரூ.7,432 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண் மற்றும் உழவர் நலத்துறைக்கு ரூ.14,984 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.



## ரூ.2 ஆயிரம் கோடியில் அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு வெற்றி மடிக்கணினி திட்டம்

அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு வெற்றி மடிக்கணினி திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்துக்கு ரூ.2 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர் தங்கும் விடுதி வசதிகளை மேம்படுத்த ரூ.10 கோடி ஆரம்ப மூலதனத்துடன் தமிழ்நாடு மாணவர் தங்கும் விடுதி மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனம் அமைக்கப்படும். இதன் மூலம், ரூ.3,200 கோடி மதிப்பீட்டில் அரசு – தனியார் கூட்டு முயற்சி திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் படுக்கை வசதிகளுடன் 200 ஒருங்கிணைந்த மாணவர் விடுதிகள் கட்டப்படும்.

2027–28-ம் கல்வி ஆண்டில் மதுரையில் சீர்மிகு சிறப்பு சட்டப்பள்ளி தரத்தில் மேம்பட்ட சட்டக்கல்வி வழங்க 300 மாணவர்களுடன் சிறப்பு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்படும். பட்ஜெட்டில் உயர்கல்வித் துறைக்கு ரூ.8,393 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 'தாய் சேர்' என்ற பெயரில், கருவுற்ற பெண்களுக்கான சேவை உதவி மையங்கள் அமைக்கப்படும். கருவுற்ற பெண்கள் பிரசவ நாள் நெருங்கும் வேளையில் இங்கு தங்கி பயன் பெறலாம். அவர்களுக்கு இலவச உணவு, மருத்துவ உதவிகள், தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும். இத்திட்டத்துக்கு ரூ.23 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

தொலைதூரப் பகுதிகள், கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு சிறப்பு மருத்துவப் பராமரிப்பு கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில், 'மையம் – கிளை' மருத்துவமனைகள் வகையிலான தொலை மருத்துவப் பராமரிப்பு அமைப்பு உருவாக்கப்படும். இதற்காக ரூ.10 கோடி ஒதுக்கப்படுகிறது.

தொற்றாநோய்கள், புற்றுநோயாளிகளின் தொடர் சிகிச்சைக்கு அத்தியாவசிய மருந்துகள் தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்வது அவசியம். அதிகரித்து வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் கூடுதல் மருந்து தேவையை பூர்த்தி செய்ய, தடையற்ற மருந்து விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் மருந்துகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.100 கோடியாக உயர்த்தப்படுகிறது. சுகாதாரத் துறைக்கு ரூ.23,357 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.



## சுற்றுலா, கலை, பண்பாட்டுத் துறைக்கு ரூ.775 கோடி

கிழக்கு கடற்கரைச் சாலையில் (ஈசிஆர்) அமைந்துள்ள தமிழரின் பாரம்பரிய பண்பாட்டுத் தலங்களின் தரத்தை உயர்த்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ரூ.5 கோடி ஒதுக்கப்படுகிறது. நாட்டுப்புறக் கலைஞர்கள் வாழ்வாதார பாதுகாப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் நாட்டுப்புற கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, சிறந்த முறையில் செயல்படும் 200 கலைக்குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 100 நாட்களுக்கு பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்புகள் வழங்கப்படும். இதற்காக ரூ.23 கோடி ஒதுக்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக சுற்றுலா, கலை, பண்பாட்டு துறைக்கு ரூ.775 கோடி ஒதுக்கப்படுகிறது.

### டிஜிட்டல் நூலகங்கள்

அரசு பொது நூலகங்களை மாநில அளவிலான டிஜிட்டல் நூலகங்களாக மறுவடிவமைப்பு செய்வதன் மூலம் டிஜிட்டல் அறிவு, ஒற்றை உறுப்பினர் சேர்க்கை, 24 மணிநேர இணைய வசதி, கைபேசி மூலம் அணுகும் வசதி, டிஜிட்டல் உள்ளடக்கம், இலவச வை-பை வசதி போன்ற வசதிகளை ஏற்படுத்த முடியும். அந்த வகையில் பொது நூலகங்களை மறுவடிவமைப்பதற்கு ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



## 'சூப்பர் க்ளீன், சூப்பர் கேம்பஸ்'

### அரசுப் பள்ளிகளில் தூய்மை பராமரிப்புக்கு புதிய திட்டம்

அரசுப் பள்ளிகளில் 'சூப்பர் க்ளீன், சூப்பர் கேம்பஸ்' (Super Clean, Super Campus) என்ற புதிய திட்டத்தின்கீழ் தினசரி தூய்மை பணிகள், குடிநீர் வசதிகள், கழிப்பறைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி வளாகங்களுக்கு 24 மணி நேர பாதுகாப்பு உறுதி செய்யப்படும். முதல்கட்டமாக 10 ஆயிரம் பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக பட்ஜெட்டில் ரூ.139 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



அரசுப் பள்ளிகளை நவீனப்படுத்தும் நோக்கில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக 'ஒரு பள்ளி நிறைவு திட்டம்' என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 2,514 தொடக்கப் பள்ளிகள், 365 நடுநிலைப் பள்ளிகள், 855 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 3,734 பள்ளிகளில் ரூ.2,132 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இதற்காக பட்ஜெட்டில் ரூ.300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சமூக, பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் இருந்து வரும் கல்வித் திறன்மிக்க மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கும் நோக்கில் பெருந்தலைவர் 'காமராஜர் சிறப்புப் பள்ளிகள்' என்ற பெயரில் நவீன உண்டு உறைவிட பள்ளிகள் நிறுவப்படும். 6 முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்கள் பயிலும் இந்த பள்ளிகளில் கல்வி, உணவு, தங்குமிடம், பாடப்புத்தகங்கள், சீருடைகள் வழங்கப்படும். இப்பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.125 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளி பாடத்திட்டத்தை மறுசீரமைக்க ரூ.25 கோடி ஒதுக்கப்படுகிறது.

## 11-ம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.277 கோடி செலவில் ஹெல்மெட் வசதியுடன் நவீன சைக்கிள்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் நடப்பு கல்வி ஆண்டில் 11-ம் வகுப்பு பயிலும் சுமார் 5.32 லட்சம் மாணவர்களுக்கு ரூ.277 கோடி மதிப்பீட்டில் ஹெல்மெட் மற்றும் வாட்டர் பாட்டில் வசதியுடன் கூடிய நவீன பிராண்டட் சைக்கிள் வழங்கப்பட உள்ளது. தன்னை உயிராக நேசிக்கும் ஜென்-ஸி தலைமுறையை தலைசிறந்த தலைமுறையாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் தமிழக முதல்வர் உறுதியாக உள்ளார். அதன் வெளிப்பாடே இந்த மேம்படுத்தப்பட்ட செயல்திட்டம். பட்ஜெட்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.44,527 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



வியாழன், ஆகஸ்ட் 6, 2026



## அறநிலையத் துறைக்கு ரூ.708 கோடி

தமிழகத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் 3,000 கோயில்களுக்கு திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்தவும், 250 தெப்பக் குளங்களை செப்பனிடவும், 75 மரத் தேர்களை சீரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல, கோயில் நிர்வாகத்தில் அறங்காவலர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து 9,205 அறங்காவலர்களை நியமிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

தமிழகம் முழுவதிலும் 1,000 ஆண்டுகள் பழமையான 213 கோயில்களை சீரமைத்து பாதுகாக்கும் வகையில் ரூ.418 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கோயில்களின் அசையும் மற்றும் அசையா சொத்துகளைப் பாதுகாப்பதிலும் அரசு தனி கவனம் செலுத்தி வருகிறது.

ஒட்டுமொத்தமாக இந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி, இந்து சமய அறநிலையத் துறைக்கு ரூ.708 கோடி ஒதுக்கப்படுகிறது.





## சுகாதாரத் துறைக்கு ரூ.23,357 கோடி

### மூத்த குடிமக்களுக்கு நடமாடும் சிகிச்சை மையம்

தமிழகம் முழுவதும் மூத்த குடிமக்களுக்காக 1,000 நடமாடும் முதியோர் சிகிச்சை மையங்கள் படிப்படியாக தொடங்கப்படும். இதில் ஒவ்வொரு மையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு இயன்முறை மருத்துவர் பணியில் இருப்பார்கள். இவர்கள் தமிழகம் முழுவதும் உள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் சென்று இலவச உடல் பரிசோதனை செய்வார்கள். நாள்பட்ட நோய்களுக்கான மருந்துகளும் வழங்கப்படும். இத்திட்டத்துக்கு ரூ.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**'தாய் கேர்' உதவி மையம்**

மாநிலம் முழுவதும் 'தாய் கேர்' என்ற பெயரில், கருவுற்ற பெண்களுக்கான சேவை, உதவி மையங்கள் அமைக்கப்படும். கருவுற்ற பெண்கள் பிரசவ நாள் நெருங்கும் வேளையில் இங்கு தங்கி பயன் பெறலாம். அவர்களுக்கு இலவச உணவு, மருத்துவ உதவிகள், தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும். இத்திட்டத்துக்கு ரூ.23 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

தொலைதூரப் பகுதிகள், கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு சிறப்பு மருத்துவப் பராமரிப்பு கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில், 'மையம் – கிளை' மருத்துவமனைகள் வகையிலான தொலை மருத்துவப் பராமரிப்பு அமைப்பு உருவாக்கப்படும். இதற்காக ரூ.10 கோடி ஒதுக்கப்படுகிறது.

தொற்றாநோய்கள், புற்றுநோயாளிகளின் தொடர் சிகிச்சைக்கு அத்தியாவசிய மருந்துகள் தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்வது அவசியம். அதிகரித்து வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் கூடுதல் மருந்து தேவையை பூர்த்தி செய்ய, தடையற்ற மருந்து விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் மருந்துகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.100 கோடியாக உயர்த்தப்படுகிறது. சுகாதாரத் துறைக்கு ரூ.23,357 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## வேளாண் துறைக்கு ரூ.14,984 கோடி
## 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்துக்கு ரூ.560 கோடி

அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அதன்மூலம் மருத்துவ தேவைக்காக மக்கள் செலவிடும் தொகையை குறைக்கும் நோக்கில், 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், தாய்மாமனின் அன்பளிப்பாக 1 கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும். இத்திட்டத்துக்கு ரூ.560 கோடி ஒதுக்கப்படுகிறது.

**கூட்டுறவுத் துறைக்கு ரூ.8,028 கோடி:** பட்ஜெட்டில், கூட்டுறவுத் துறைக்கு ரூ.8,028 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு வழங்கும் மின்மானியத்துக்கு ரூ.7,432 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண் மற்றும் உழவர் நலத்துறைக்கு ரூ.14,984 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.





## சுற்றுலா, கலை, பண்பாட்டுத் துறைக்கு ரூ.775 கோடி

கிழக்கு கடற்கரைச் சாலையில் (ஈசிஆர்) அமைந்துள்ள தமிழரின் பாரம்பரிய பண்பாட்டுத் தலங்களின் தரத்தை உயர்த்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ரூ.5 கோடி ஒதுக்கப்படுகிறது. நாட்டுப்புறக் கலைஞர்கள் வாழ்வாதார பாதுகாப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் நாட்டுப்புற கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, சிறந்த முறையில் செயல்படும் 200 கலைக்குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 100 நாட்களுக்கு பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்புகள் வழங்கப்படும். இதற்காக ரூ.23 கோடி ஒதுக்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக சுற்றுலா, கலை, பண்பாட்டு துறைக்கு ரூ.775 கோடி ஒதுக்கப்படுகிறது.



**வறீதையா கான்ஸ்தந்தின்**
பேராசிரியர், கடல் சூழலியல் ஆய்வாளர்
தொடர்புக்கு: vareeth2026@gmail.com

# மாமல்லன் நீர்த்தேக்கம்

## வலசைப் பறவை வாழிடங்களையும் உள்ளூர் உணவாதாரத்தையும் முற்றாக அழித்துவிடும்

சென்னைக்குத் தெற்காக முட்டுக்காடு கழிமுகம் தொடங்கி, தெற்கே ஒதியூர் கழிமுகம் வரை கிழக்குக் கடற்கரைச் சாலைக்கும் பழைய மகாபலிபுரம் சாலைக்கும் இடையில், ஏறத்தாழ 30 கி.மீ. நீளத்தில் அமைந்திருக்கிறது நெம்மேலி கழி. 69 சிறிதும் பெரிதுமான ஏரிகளும் கண்மாய்களும் வெள்ளநீர்ப் பாதைகளால் இணைக்கப்பட்டுள்ள நெம்மேலி ஈரநிலம் ஓர் உவர்நீர்ப் பரப்பு. உவர் சதுப்புநிலம் (salt marsh), சேற்றுப்படுகை (mudflats), அலையாத்திகள் உள்ளிட்ட பலவகைச் சூழலியல் கட்டமைப்புகளின் சேகரம் இப்பகுதி; 230க்கும் மேற்பட்ட பறவைகளின் வாழ்விடம். ராம்சர் தலமாக அறிவிப்பதற்கான அனைத்துத் தகுதிகளும் கொண்ட நீர்நிலையும்கூட.

### பிழையான திட்டம்

8,500 ஏக்கர் பரப்பு நெம்மேலி ஈர நிலத்தில் திருப்போரூர், திருக்கழுக்குன்றம் வட்டங்களுக்கு நன்னீர் வழங்குவதற்காக மாமல்லன் நீர்த்தேக்கத் திட்டத்துக்கு 2026 ஜனவரியில் அடிக்கல் நாட்டினார் முன்னாள் முதல்வர் ஸ்டாலின். திட்டத்தின் முதற்கட்டமாக 4,375 ஏக்கர் பரப்பைச் சூழ்ந்து தடுப்பணை (மடு) அமைக்கப்படுகிறது. இதற்காக, இதைத் தொட்டமைந்துள்ள பக்கிங்ஹாம் கால்வாயின் பாதை மாற்றியமைக்கப்படுகிறது. அதோடு, கடலுடனான கால்வாயின் தொடர்பும் தடைசெய்யப்படுகிறது. மாமல்லன் நீர்த்தேக்கம் ஒரு நல்ல நோக்கத்தை முன்வைத்து, தவறான தரவுகளின் அடிப்படையில், தவறான இடத்தில் தொடங்கப்பட்டுள்ள பிழையான திட்டம்.

அண்ணா பல்கலைக்கழகத்தின் நீர்வள மேம்பாட்டுத் துறை அளித்த தொழில்நுட்ப / பொருளாதாரச் சாத்தியப்பாடு (Pre feasibility study) அறிக்கை, இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் வழங்கிய மூன்று மாதச் சூழலியல் ஆய்வறிக்கை – இந்த இரண்டின் அடிப்படையில்தான் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆய்வு பருவமழைக் காலத்தில் அல்லாமல், கோடை மாதங்களில் நிகழ்த்தப்பட்டது என்பதுதான் அந்த ஆய்வறிக்கையின் போதாமை. தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தில் இதே தவறை இழைத்து, பிறகு பாதையைத் திருத்த வேண்டியதாயிற்று.

### மீனவர்களின் வாழ்வாதாரம்

பருவமழை, ஓதங்கள், நீரியல், காற்று, அடித்தரை மண், உயிர்ப்பன்மை, உடனுறை சமூக வாழிடம், உணவாதாரம் இவற்றையெல்லாம் பழுதின்றி ஆராய்ந்த பிறகே இது போன்ற ஒரு பெருந்திட்டம் தீட்டப்பட வேண்டும். ஆனால், சூழலியல் தாக்க மதிப்பீடு, சமூகத் தாக்க மதிப்பீடு இல்லாமல், தமிழக மீன்வளத் துறையின் தடையின்மைச் சான்றிதழ் பெறாமல் திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கரைக்கடலின் மீன்வளம் கரையில் உள்ள கழிமுகம் உள்ளிட்ட உவர்நீர்ப் பரப்புகளைச் சார்ந்திருக்கிறது. நன்னீரும் உயிர்ச்சத்துகளும் மட்டுமல்ல, குஞ்சுமீன்களும் இங்கிருந்துதான் கடலுக்குப் போகின்றன. கடலில் பாடு குறையும் பருவங்களில் விழுப்புரம் கடலோர



மீனவர்கள் வாழ்வாதாரத்துக்கு பக்கிங்ஹாம் கால்வாயை நம்பியிருப்பதுபோலவே, கடலோரக் கிராமங்களைச் சேர்ந்த 12,000 மரபார்ந்த மீனவர்களுக்கு நம்பகமான வாழ்வாதாரமாக இது இருந்துவருகிறது.

கோவளம் பகுதியைச் சேர்ந்த நாராயணன் (52), "நெம்மேலி ஆற்றைச் சூழ்ந்திருக்கிற 16 கிராமங்களில் இருந்தும் இந்தப் பகுதிக்கு மீன்பிடிக்க வருவார்கள், கோவளத்தில் 500 தலைக்கட்டு இருக்கிறது என்றால், 350 பேர் நெம்மேலி ஆற்றில் மீன்பிடிக்க வருவார்கள். சீசனில் எல்லாரும் இங்கே வந்துவிடுவார்கள்" என்கிறார்.

இருளர் உள்ளிட்ட உள்நாட்டு மீனவர்கள் உவர்நீர்ப் பரப்பில் இறால் தடவிப் பிழைப்பு நடத்துபவர்கள். நீர்மட்டத்தைப் பொறுத்து இறாலைத் தடவியும், மூழ்கியும் பிடிப்பார்கள். வலை போட்டும் பிடிப்பது உண்டு. பெரிய நெம்மேலிப் பழங்குடி இருளர் சமுதாயக் குடியிருப்பான கன்னியம்மன் நகர் மோகனா (48) ஐந்து வயதிலேயே என்னுார் ஓடையில் இறால் தடவப் போனவர். "அடுப்புல உலை ஏத்தி வெச்சுகிறு இறால் தடவப் போனேன்னா, அன்னிக்குப் பொழப்புக்குக் கெடச்சுடும். வீட்டுக்காரர் நண்டு பிடிச்சுட்டு வரேன்னு சொல்லிட்டுப் போனார்னா, 300 ரூபாய்க்காவது புடிச்சினு வந்துருவாரு. இப்ப அந்த நம்பிக்கை செத்துப்போச்சு! கடலை மறிச்சுட்டாங்க" என்கிறார் மோகனா.

### ஆபத்துகள்

2026 ஜனவரியில் நெம்மேலி நீர்த்தேக்கத் திட்டப் பணி தொடங்கிய பிறகு, கடலில் இருந்து ஓதநீர் உள்ளே வருவது நின்றுபோனது. கேளம்பாக்கம், பையனூரில் கடல் ஓதநீர் நுழையும் பாதைகள் அடைக்கப்பட்டுவிட்டன. இனிமேல் அங்கே சினை இறால்கள் நுழைய வாய்ப்பே இல்லை. கோவளத்தில் இயங்கிவருகிற மத்திய அரசின் நிறுவனமான உவர்நீர் மீன்வளர்ப்பு மையம் (CIBA, ICAR) பண்ணை அமைப்பதற்காக மடுக்களை எழுப்பி, மழைவெள்ளம் ஓடிவருகிற பாதைகளை மறித்துவிட்டது. உள்நாட்டு மீனவர்களும் கடலோர மரபார்ந்த மீனவர்களும் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றனர்.

உவர் சதுப்புநிலமும் சேற்றுப்படுகைகளும் கடற்கரை ஒழுங்காற்று மண்டல அறிவிக்கையில் (பிரிவு 1அ) வளர்ச்சித் திட்டங்கள் நடைபெறத் தடை செய்யப்பட்ட பகுதிகளாகும். இன்றுவரை கழிவெளி, நெம்மேலி உவர்ப் பரப்புகள் மட்டுமல்ல, தமிழ்நாட்டுக் கடற்கரை ஒழுங்காற்று மண்டலத்தில் அமைந்துள்ள எந்த உவர்சதுப்பும் சேற்றுப்பரப்பும் வரையறுக்கப்படவில்லை.

2010களில் தொடர்ந்து ஏற்பட்ட புயல் அனுபவங்களுக்குப் பிறகு, இந்திய வெப்ப மண்டல வானியல் ஆய்வு மையம் கிழக்குக் கடற்கரையின் புயல்வெள்ள அபாய வரைபடத்தை (Coastal Inundation map) வெளியிட்டது. செங்கல்பட்டு கடற்கரைப் பகுதியில் அலைகள் 1.68 மீட்டர் அளவுக்கு உயரலாம், நிலப்பகுதியில் மூன்று மீட்டர் அளவுக்கு வெள்ளநீர் உயரலாம் என எச்சரிக்கிறது இந்த வரைபடம். நீர்த்தேக்கத்துக்காக அமைக்கப்படுகிற மடு, கடற்கோள் காலத்தில் ஒரு நீர்க்கூண்டாக மாறி, கடற்கரைக் கிராமங்களை மூழ்கடிக்கும் அபாயத்தைப் புறக்கணிப்பதற்கு இல்லை.

சோழமண்டலக் கடற்கரை இயல்பிலேயே தாழ்ந்த நிலப்பகுதியைக் கொண்டது; புயல் அபாயம் நிறைந்ததும்கூட. கடல் மட்டம் 25 செ.மீ. உயர்ந்தால்கூட, சென்னை உள்ளிட்ட கடலை ஒட்டிய பகுதிகள் மூழ்கிப்போகும். வர்தா புயலின்போது சென்னை, கடலூர் கடற்கரைகள் புயல்வெள்ளத்தில் மூழ்கின. கஜா புயல் தஞ்சை, நாகை கடற்கரைகளைச் சேற்றினால் மூழ்கடித்தது.

### அரசு செய்ய வேண்டியவை..

2004 டிசம்பரில் சுனாமிப் பேரிடர்த் தாக்கத்திலிருந்து தமிழகக் கடற்கரைகளைப் பாதுகாத்த நான்கு விஷயங்கள் – பக்கிங்ஹாம் கால்வாய், பிச்சாவரம், முத்துப்பேட்டை அலையாத்திக் காடுகள், மன்னார் கடல் பவளத்திட்டுகள், நாகப்பட்டினம் மணல்மேடுகள். இவற்றையே காக்கவும் மேம்படுத்தவும் வேண்டும். பறக்கும் ரயில் பாதை, நீலக்கொடிக் கடற்கரைகளில் காட்டிவரும் முனைப்பைக் கடற்கரைப் பாதுகாப்பில் அரசுகள் காட்ட வேண்டும்.

பேரிடர்த் தயார்நிலை என்பது முற்காப்பு நடவடிக்கை – இயற்கைச் சீற்றத்தின் அதிகபட்சப் பாதிப்பை எதிர்கொள்ளும் வகையில் அடிப்படைக் கட்டுமானங்களை உருவாக்குவது. அண்மைக் காலத்தில் காலநிலைப் பேரிடர் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. அது வளர்ச்சிப் பேரிடராக மாறும் அபாயத்தைத் தவிர்த்தாக வேண்டும். 2026 மகா எல் நினோ (Super El Nino) ஆண்டு என்கிற அளவில், காலநிலைப் பேரிடர் கிழக்கு உலக நாடுகளை மிரட்டிக்கொண்டிருக்கிறது.

சுனாமிக்குப் பிந்தைய 20 ஆண்டுகளில் கடற்கரைகளில் இயற்கை அரண்கள்/உயிர்வேலிகள், அலையாத்திக் காடுகளை ஏற்ற இடங்களில் நிறுவியிருக்க வேண்டும். கடற்கரைக்கு இணையாக ஓடும் பக்கிங்ஹாம் கால்வாயைச் சீரமைத்து ஓடவிடுவதே வறட்சிக்கும் பேரிடர் மேலாண்மைக்கும் உகந்த திட்டம். அதேநேரம், நெம்மேலியில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட வேண்டும்.



Phone No: 73739 11577 & 73739 11133

பொது அறிவு: செபி (SEBI - Securities and Exchange Board of India) என்பது இந்தியாவில் உள்ள பங்குச் சந்தைகள் மற்றும் மூலதனச் சந்தைகளை கட்டுப்படுத்தி, நெறிமுறைப்படுத்தும் ஒரு தன்னாட்சி பெற்ற அரசு அமைப்பாகும். இது ஏப்ரல் 12, 1988 அன்று உருவாக்கப்பட்டது.

### 370-வது பிரிவு ரத்து செய்யப்பட்டதால்

## காஷ்மீரில் கல்வி, சுகாதாரத்தில் முன்னேற்றம்

### 7-ம் ஆண்டு நிறைவையொட்டி பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்

புதுடெல்லி

இந்திய அரசியல் சாசனத்தின் 370-வது பிரிவு ரத்து செய்யப்பட்டதால் ஜம்மு காஷ்மீர், லடாக்கில் கல்வி, சுகாதார வசதியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் தளத்தில் நேற்று வெளியிட்ட பதிவு:

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, இதே நாளில்தான், இந்திய அரசியல் சாசனத்தின் 370 மற்றும் 35(ஏ) ஆகிய பிரிவுகள் வரலாறாக மாறின. இது ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் பயணத்தில் ஒரு தீர்க்கமான புதிய அத்தியாயம்.

அன்றிலிருந்து, ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் மக்களின் வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உள்கட்டமைப்பு விரிவடைந்துள்ளதுடன், கல்வி, சுகாதாரம், தொழில் முனைவோர் மற்றும் விளையாட்டு போன்ற துறைகளில் வாய்ப்புகள் வளர்ச்சியடைந்துள்ளன. பெண்கள், விளிம்புநிலை சமூகத்தினர் பல ஆண்டுகளாகத் தங்கள் அடிப்படை அரசியலமைப்பு உரிமைகளை இழந்திருந்தவர்கள், அதிகாரம் பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டு ஆகஸ்ட் 5-ம் தேதி இன்னும் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் இந்த ஆண்டில்தான் நமது நாடு டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜியின் 125-வது பிறந்தநாளைக் கொண்டாடுகிறது. தேசிய ஒருமைப்பாட்டின் மீதான அவரது வாழ்நாள் அர்ப்பணிப்பு தலைமுறைகளைத் தொடர்ந்து ஊக்கப்படுத்துகிறது. பல தசாப்தங்களுக்கு முன்பு அவர் எதை கற்பனை செய்தாரோ, அது ஆகஸ்ட் 5, 2019 அன்று வரலாற்று ரீதியாக நிறைவேறியது.

ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக்கில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் தங்கள் லட்சியங்களைத் தொடரவும், வளர்ந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்குப் பங்களிக்கவும் வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்வதில் அரசு உறுதியாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

செயின்ட் லூயிஸ் கிளப் செஸ்

# ரேபிட் பிரிவில் பிரக்ஞானந்தா முதலிடம்

■ செயின்ட் லூயிஸ்

அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் கிளப் சார்பில் ரேபிட் மற்றும் பிளிட்ஸ் செஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர். பிரக்ஞானந்தா, உஸ்பெகிஸ்தானின் ஜாவோகிர் சிந்தரோவ், அமெரிக்காவின் வெஸ்லி சோ, லேவான் அரோனியன், லீனியர் டொமிங்கியூஸ் பெரெஸ், கருனா பேபியானோ, அவண்டர் லியோங், நெதர்லாந்தின் அனிஷ் கிரி, ஜோர்டான் வான் பாரஸ்ட், ஜெர்மனியின் வின்சென்ட் கீமர் ஆகிய 10 வீரர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இதில் 9 சுற்றுகள் கொண்ட ரேபிட் பிரிவில் பிரக்ஞானந்தா 12 புள்ளிகளை குவித்து முதலிடம் பிடித்துள்ளார். இதன் மூலம் அவர், இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறவுள்ள கிராண்ட் செஸ் டூர் இறுதிப்போட்டிக்கு தகுதிபெறும் வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.



கடைசி சுற்றில் பிரக்ஞானந்தா, நெதர்லாந்தின் ஜோர்டன் வான் பாரஸ்டிடம் தோல்வி அடைந்தார். எனினும் உஸ்பெகிஸ்தானின் ஜாவோகிர் சிந்தரோவைவிட ஒரு புள்ளி கூடுதலாக பெற்றிருந்ததால் முதலிடத்தை பிடித்தார். பிரக்ஞானந்தா 4 வெற்றி, 4 டிரா, ஒரு தோல்வியை பதிவு செய்தார்.

கிராண்ட் செஸ் டூர் தொடரின் வெற்றியாளர் ரேபிட் பிரிவின் அடிப்படையில் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. பிளிட்ஸ் பிரிவில் 18 சுற்று போட்டிகள் நடைபெற உள்ளன. இதன் முடிவில்தான் வெற்றியாளர் யார்? என்பது தெரிய வரும். ஜாவோகிர் சிந்தரோவ், வெஸ்லி சோ ஆகியோர் தலா 11 புள்ளிகளுடன் உள்ளனர்.

# பி.வி.சிந்து அகாடமிக்கு அடிக்கல்

என். மகேஷ்குமார்

■ விசாகப்பட்டினம்

விசாகப்பட்டினத்தில் நேற்று பி.வி.சிந்து ஸ்போர்ட்ஸ் அகாடமிக்கு ஆந்திர மாநில கல்வித் துறை அமைச்சர் லோகேஷ் அடிக்கல் நாட்டினார்.

இந்திய பாட்மிண்டன் நட்சத்திரமான பி.வி.சிந்து கேட்டுக்கொண்டதற்கு இனங்க விசாகப்பட்டினத்தில் ஸ்போர்ட்ஸ் அகாடமி தொடங்க இடமும், அதற்கான அனுமதியையும் ஆந்திர அரசு வழங்கியிருந்தது. இந்நிலையில் பி.வி.சிந்து ஸ்போர்ட்ஸ் அகாடமியின் கட்டுமான பணிகள் நேற்று தொடங்கின.

இதற்கான நிகழ்ச்சியில் ஆந்திர மாநில கல்வித்துறை அமைச்சர் நாரா லோகேஷ் பங்கேற்று அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். நாரா லோகேஷ் கூறும் போது, "பி.வி. சிந்து அகாடமி மூலம் தங்களின் திறமையை வீரர்கள் மேலும் மெருகேற்றி கொள்ளலாம். எவ்வித ஊக்கமும் இல்லாத காலத்திலேயே பி.வி.சிந்து தன்னுடைய திறமை மூலம் ஒலிம்பிக்கில் பதக்கத்தை வென்று சாதனை படைத்தார்.

ஒவ்வொரு விளையாட்டு வீரர்களின் பின்னாலும் அவர்களின் பெற்றோர்கள், பயிற்சியாளர்கள் இருப்பார்கள். அவர்களின் ஊக்குவிப்பும் மிக அவசியம். பி.வி. சிந்துவின் அகாடமி நமது மாநிலத்துக்கும், நாட்டுக்கும் பெருமை தேடி தரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது" என்றார்.